# பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி
# முதல் பத்து

## ஐந்தாம் திருமொழி - உய்ய உலகு
## தலையை நிமிர்த்து முகத்தை அசைத்து ஆடுதல்: செங்கீரைப் பருவம்

** உய்ய உலகு படைத்து உண்ட மணிவயிறா! *
ஊழி தொறூழி பல ஆலின் இலை அதன் மேல் *
பைய உயோகு துயில் கொண்ட பரம்பரனே! *
பங்கய நீள் நயனத்து அஞ்சன மேனியனே! **
செய்யவள் நின் அகலம் சேமம் எனக் கருதிச் *
செல்வு பொலி மகரக் காது திகழ்ந்து இலக *
ஐய! எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே 1

கோள் அரியின் உருவம் கொண்டு அவுணன் உடலம் *
குருதி குழம்பி எழக் கூருகிரால் குடைவாய்! *
மீள அவன் மகனை மெய்ம்மை கொளக் கருதி *
மேலை அமரர் பதி மிக்கு வெகுண்டு வர **
காள நன்மேகம் அவை கல்லொடு கார் பொழியக் *
கருதி வரைக் குடையாக் காலிகள் காப்பவனே! *
ஆள! எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே 2

நம்முடை நாயகனே! நான்மறையின் பொருளே! *
நாவியுள் நற்கமல நான்முகனுக்கு ஒருகால் *
தம்மனை ஆனவனே! தரணிதல முழுதும் *
தாரகையின் உலகும் தடவி அதன் புறமும் **
விம்ம வளர்ந்தவனே! வேழமும் ஏழ் விடையும் *
விரவிய வேலைதனுள் வென்று வருமவனே! *
அம்ம! எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே 3

வானவர் தாம் மகிழ வன்சகடம் உருள *
வஞ்ச முலைப் பேயின் நஞ்சமது உண்டவனே! *
கானக வல்விளவின் காய் உதிரக் கருதிக் *
கன்றது கொண்டு எறியும் கருநிற என் கன்றே! **
தேனுகனும் முரனும் திண்திறல் வெந்நரகன் *
என்பவர் தாம் மடியச் செருவதிரச் செல்லும் *
ஆனை! எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே 4

மத்தளவும் தயிரும் வார்குழல் நன்மடவார் *
வைத்தன நெய் களவால் வாரி விழுங்கி * ஒருங்கு
ஒத்த இணை மருதம் உன்னிய வந்தவரை *
ஊரு கரத்தினொடும் உந்திய வெந்திறலோய்! **
முத்தின் இளமுறுவல் முற்ற வருவதன் முன் *
முன்ன முகத்தணியார் மொய்குழல்கள் அலைய *
அத்த! எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே 5

காயமலர் நிறவா! கருமுகில் போல் உருவா! *
கானக மாமடுவில் காளியன் உச்சியிலே *
தூய நடம் பயிலும் சுந்தர என் சிறுவா! *
துங்க மதக்கரியின் கொம்பு பறித்தவனே! **
ஆயம் அறிந்து பொருவான் எதிர் வந்த மல்லை *
அந்தரம் இன்றி அழித்து ஆடிய தாள் இணையாய்! *
ஆய! எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே 6

துப்புடை ஆயர்கள் தம் சொல் வழுவாது ஒருகால் *
தூய கருங்குழல் நல்தோகை மயில் அனைய *
நப்பினை தன் திறமா நல்விடை ஏழ் அவிய *
நல்ல திறல் உடைய நாதனும் ஆனவனே! **
தப்பின பிள்ளைகளைத் தன மிகு சோதி புகத் *
தனி ஒரு தேர் கடவித் தாயொடு கூட்டிய * என்
அப்ப! எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே 7

** உன்னையும் ஒக்கலையில் கொண்டு தமில் மருவி *
உன்னொடு தங்கள் கருத்தாயின செய்து வரும் *
கன்னியரும் மகிழக் கண்டவர் கண் குளிரக் *
கற்றவர் தெற்றி வரப் பெற்ற எனக்கு அருளி **
மன்னு குறுங்குடியாய்! வெள்ளறையாய்! மதிள் சூழ் *
சோலைமலைக்கு அரசே! கண்ணபுரத்து அமுதே! *
என் அவலம் களைவாய்! ஆடுக செங்கீரை *
ஏழுலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே 8

பாலொடு நெய் தயிர் ஒண்சாந்தொடு செண்பகமும் *
பங்கய நல்ல கருப்பூரமும் நாறி வர *
கோல நறும்பவளச் செந்துவர் வாயின் இடைக் *
கோமள வெள்ளி முளைப் போல் சில பல் இலக **
நீல நிறத்து அழகார் ஐம்படையின் நடுவே *
நின் கனி வாய் அமுதம் இற்று முறிந்து விழ *
ஏலு மறைப் பொருளே! ஆடுக செங்கீரை *
ஏழுலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே 9

செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல் விரலில் *
சேர் திகழ் ஆழிகளும் கிண்கிணியும் * அரையில்
தங்கிய பொன்வடமும் தாள நன்மாதுளையின் *
பூவொடு பொன்மணியும் மோதிரமும் கிறியும் **
மங்கல ஐம்படையும் தோள் வளையும் குழையும் *
மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக *
எங்கள் குடிக்கு அரசே! ஆடுக செங்கீரை *
ஏழுலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே 10

** அன்னமும் மீனுருவும் ஆளரியும் குறளும் *
ஆமையும் ஆனவனே! ஆயர்கள் நாயகனே! *
என் அவலம் களைவாய்! ஆடுக செங்கீரை *
ஏழுலகும் உடையாய்! ஆடுக ஆடுக என்று **
அன்ன நடை மடவாள் அசோதை உகந்த பரிசு *
ஆன புகழ்ப் புதுவைப் பட்டன் உரைத்த தமிழ் *
இன்னிசை மாலைகள் இப்பத்தும் வல்லார் * உலகில்
எண்திசையும் புகழ் மிக்கு இன்பம் அதெய்துவரே 11

**அடிவரவு:** உய்ய கோளரியின் நம்முடை வானவர் மத்து காய துப்பு உன்னை பாலொடு செங்கமலம் அன்னம் மாணிக்கக்கிண்கிணி

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

---